# நான் என்ன செய்ய வேண்டும்?

தொடர் - 67

மே 2014

*தொகுப்பு:* **Dr. B. வில்லியம் தர்ம ராஜா**

**யோவான்**

3301 அழிந்து போகிற போஜனத்திற்காக அல்ல, நித்திய ஜீவன் வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்திற்காகவே கிரியை நடப்பி (6:27)

3302 இயேசுவினிடத்தில் வா; ஒருக்காலும் பசியடையாய் (6:35)

3303 இயேசுவினிடத்தில் விசுவாசமாயிரு; ஒருக்காலும் தாகமடையாய் (6:35)

3304 இயேசுவினிடத்தில் வா; அவர் புறம்பே தள்ளுவதில்லை (6:37)

3305 நீ மனுஷ குமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தை பானம் பண்ணாமலும் இருந்தால் உனக்குள்ளே ஜீவனில்லை (6:53)

3306 என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு; நான் அவனைக் கடைசி நாளில் எழுப்புவேன்" (6:54)

3307 "என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவன் என்னிலே நிலைத்திருக்கிறான்; நானும் அவனிலே நிலைத்திருக்கிறேன்" (6:56)

3308 "என்னை புசிக்கிறவனாகிய நீ என்னாலே பிழைப்பாய் ... வானத்திலிருந்து இறங்கிய அப்பத்தைப் புசிக்கிறவனாகிய நீ என்றென்றைக்கும் பிழைப்பாய்" (6:57,58)

3309 "நீ (ஒருவன்) என் பிதாவின் அருளைப் பெறாவிட்டால் என்னிடத்திற்கு வரமாட்டா(ன்)ய்" (6:65)

3310 உன் சுயமகிமையைத் தேடாமல் தேவனுடைய மகிமையைத் தேடு (7:18)

3311 தோற்றத்தின்படி தீர்ப்பு செய்யாமல், நீதியின்படி தீர்ப்பு செய (7:24)

3312 தாகமாயிருந்தால், இயேசுவினிடத்தில் வந்து, பானம் பண்ணு (7:37)

3313 இயேசுவினிடத்தில் விசுவாசமாயிரு; உன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் (7:38)

3314 பரிசுத்த ஆவியைப் பெற இயேசுவை விசுவாசி (7:39)

3315 வேதத்தை அறி; வேதத்தை அறியாதவன் சபிக்கப்பட்டவன் (7:49)

3316 இனிப் பாவஞ்செய்யாதே (8:11)

3317 "என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான்" (8:12)

3318 "நீ என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் என் சீஷனாயிருப்பாய்" (8:31)

3319 உன் பிதாவினுடைய (பிசாசு) இச்சைகளின்படி செய்ய மனதாயிராதே (8:44)

3320 தேவனுடைய வசனங்களுக்குச் செவிகொடு (8:4)

3321 கர்த்தரைக் கனம் பண்ணு (8:49)

3322 நீ உனக்கு மகிமையைத் தேடாதே (8:50)

3323 நீ இயேசுவின் வார்த்தையைக் கைக்கொள், என்றென்றைக்கும் மரணத்தைக் காண்பதில்லை (8:51,52)

3324 தேவனை அறி (8:55)

3325 நீ தேவபக்தியுள்ளவனாயிருந்து அவருக்குச் சித்தமானதைச் செய்; உனக்குச் தேவன் செவி கொடுப்பார் (9:31)



3326 ஆட்டுத் தொழுவத்துக்குள் வாசல் வழியாய்ப் பிரவேசி; வேறு வழியாய் ஏறாதே (10:1)

3327 உன்னுடைய ஆடுகளைப பேர் சொல்லிக் கூப்பிடு (10:3)

3328 ஆடுகளுக்கு முன்பாக நடந்து போ (10:4)

3329 இயேசுவே வாசல்; அவர் வழியாய் உட்பிரவேசித்தால், நீ இரட்சிக்கப்படுவாய் (10:9)

3330 ஆடுகளை விட்டு ஓடிப்போகாதே (10:12)

3331 ஆடுகளுக்காக கவலைப்படாமலிராதே (10:13

3332 நீ செய்கிற கிரியைகளே உன்னைக் குறித்து சாட்சி கொடுக்கிறது (10:25)

3333 இயேசுவின் சத்தத்திற்குச் செவிகொடு; அவருக்குப் பின் செல்லு (10:2)

3334 உனக்கு வந்திருக்கும் பிரச்சனை உன் அழிவுக்கானதாயிராமல், தேவனுடைய மகிமை விளங்குவதற்கானதாகவும், தேவன் மகிமைப்படுத்துவதற்கானதாயும் இருக்கலாம். (11:4)

3335 பகலிலே நடந்தால், வெளிச்சத்தைக் காண்கிறபடியினால் இடறமாட்டாய்; இரவிலே நடந்தால், உன்னிடத்தில் வெளிச்சம் இல்லாதபடியினால் இடறுவாய் (11:10)

3336 "என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்" (11:25)

3337 "உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்" (11:26)

3338 நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் (11:40)

3339 தேவன் செவிகொடுத்தபடியினால் அவரை ஸ்தோத்திரி (11:4)

3340 "கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும்; செத்ததேயாகில் மிகுந்த பலனைக் கொடுக்கும்" (12:24)

3341 "நீ உன் ஜீவனை சிநேகிக்கிறவன் எனில் நீ அதை இழந்து போவாய்; இந்த உலகத்தில் நீ உன் ஜீவனை வெறுக்கிறன் எனில் அதை நித்திய ஜீவகாலமாய்க் காத்துக்கொள்ளுவாய்" (12:25)

3342 நீ இயேசுவுக்கு ஊழியஞ்செய்தால் அவரைப் பின்பற்று (12:26)

3343 "இயேசு எங்கே இருக்கிறாரோ அங்கே அவர் ஊழியக்காரனாகிய நீயும் இரு" (12:26)

3344 நீ இயேசுவுக்கு ஊழியஞ்செய்; கனம் பண்ணப்படுவாய் (12:26)

3345 நீ இருளில் அகப்படாதபடிக்கு, ஒளி உன்னோடிருக்கையில் நட (12:35)

3346 நீ ஒளியின் பிள்ளையாகும்படிக்கு, ஒளியினிடத்தில் விசுவாசமாயிரு (12:36)

3347 தேவனால் வரும் மகிமையிலும் அதிகமாய் மனுஷரால் வரும் மகிமையை விரும்பாதே (12:43)

3348 "என்னிடத்தில் விசுவாசமாயிரு; இருளில் இராய்" (12:46)

3349 இயேசுவின் வார்த்தைகளை ஏற்றுக்கொள்; இல்லையேல், வசனமே உன்னைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும் (12:48)

3350 காட்டிக் கொடாதே; காட்டிக் கொடுப்பவன் சுத்தமானவன் அல்லன் (13:11)

# வாழ்க்கை வாழ்வதற்கே

**Dr. P. செல்வராஜ்** பொள்ளாச்சி

உங்களுக்கு ஒரு வாழ்க்கையை தேவன் அருங்கொடையாக அளித்துள்ளார். அந்த வாழ்க்கையைப் பயனுள்ள, உயிரோட்டமுள்ள வாழ்க்கையாக நீங்கள் ஏன் வாழக்கூடாது?

மோசே ஒரு பெரிய பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசி. தம்முடைய கிருபையை உலகிற்கு வெளிப்படுத்த தேவன் தெரிந்து கொண்ட மக்களை மோசே வழிநடத்த வேண்டியிருந்தது. உலகிற்கு என்று கூறும்போது எல்லா மக்கள் இனங்களும் அதில் அடங்கும். ஆனால் தெரிந்து கொள்ளப்பட்ட மக்களோ...

அவர்கள் எகிப்தில் அடிமைகளாக இருந்தார்கள். அந்த மக்களினமே முற்றிலும் அழிந்து போகக்கூடிய அபாயம் இருந்தது. ஆனால், தேவன் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் உண்மையுள்ளவராயிற்றே. எனவே தேவன் அவர்களைக் காப்பாற்றி, விடுவித்து செங்கடலைப் பிளந்து விடுதலைப் பயணத்தை அவர்கள் தொடரச் செய்தார். இப்போது அவர்கள் யோர்தான் ஆற்றைக் கடக்க வேண்டியிருக்கிறது. அதை அவர்களால் கடக்கமுடியும். செங்கடலுக்கு முன்பாக நிற்கும்போதிருந்த அச்சுறுத்தும் சூழல்கள் இப்போது அவர்களுக்கில்லை. அந்த நிலையில் மோசே அவர்களைப் பார்த்துக் கூறுகிறார் :

"நான் (தேவனாகிய கர்த்தர்) ஜீவனையும் மரணத்தையும், ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் உனக்குமுன் வைத்தேன் என்று உங்கள்மேல் வானத்தையும் பூமியையும் இன்று சாட்சி வைக்கிறேன்; ஆகையால், நீயும் உன் சந்ததியும் பிழைக்கும்படிக்கு நீ ஜீவனைத் தெரிந்து கொள்" (உபாகமம் 30:19)

தேவனின் இந்த அழைப்பு அவர்களுக்கு மட்டுமல்ல, உங்களுக்கும் எனக்கும்தான். கடக்கமுடியாத செங்கடலை நாம் கடக்கச் செய்திருக்கிறார். தொடர்ந்து அவர் எங்கெல்லாம் வழி நடத்துகிறாரோ அங்கெல்லாம் நாம் செல்வதற்கான அவர்தம் ஆவியன் வல்லமையை நமக்கு அருளிச் செய்திருக்கிறார். எனவே ஜீவனைத் தெரிந்து கொள்வோமாக!

"நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறது அரிது; நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத்துணிவான். நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்" (ரோமர் 5:7,8)

தேவனே நமக்கென்று தெரிந்து கொண்டுள்ள உயிரோட்டமுள்ள, பயனுள்ள வாழ்க்கையை அப்படியே ஏற்றுக்கொள்வதில் தடையேதும் இல்லையே! "(நாம்) பிழைத்தாலும் மரித்தாலும் நாம் கர்த்தருடையவர்களாயிருக்கிறோம்" (ரோமர் 14:8அ). கர்த்தருடையவர்கள் ஜீவனைத் தெரிந்துகொண்டவர்கள். ஆமென்!



# "காத்திருப்பதும், கவனிப்பதும்"

**Dr. P. செல்வராஜ்** பொள்ளாச்சி

டக் ஒயிற் (Doug White) அன்று ஒரு பாடத்தைக் கற்றுக்கொண்டார். என்று என்பதுடன் யார் அவர் என்று நீங்கள் கேட்பது என்னுடைய செவிகளில் தொனிக்கிறது. ஒரு எஞ்ஜின் பொருத்தப்பட்ட ஒரு சிறிய விமானத்தைப் பறக்க வைப்பதில் ஓரளவு அனுபவமுடைய அவர் 2009ம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஒருநாள் தன்னுடைய மனைவியுடனும் இரண்டு மகள்களுடனும் இரண்டு எஞ்ஜின் பொருத்தப்பட்ட சற்றுப் பெரிய விமானத்தில் பயணிக்க நேரிட்டது.

ஒன்பதாயிரம் அடி உயரத்தில் விமானம் பறந்து கொண்டிருந்தது. விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு அறையுடன் ரேடியோ மூலம் தொடர்புடனிருந்த விமானி திடீரென்று தன்னுடைய இருக்கையில் சரிந்து விழுந்ததைப் பார்க்க நேரிட்ட டக் ஒயிற் அதிர்ச்சியடைந்தார். பதட்டமடைவதைத் தவிர்த்த டக் ஒயிற் செயல்படத் துவங்கினார். கட்டுப்பாட்டு அறையுடன் தொடர்பு கொள்ளப் பயன்படும் பட்டனைப் பற்றி மட்டும் அவருக்கு தெரியும். கட்டுப்பாட்டு அறையின் ஆலோசனைக்காகக் காத்திருந்து, காத்திருந்து விமானத்தைப் பாதுகாப்பாகத் தரையிறக்கினார். அந்த சம்பவத்தை விமானக் கட்டுப்பாட்டு சங்கம் "ஈஸ்டர் அற்புதம்" என்று அழைத்தது. டக் ஒயிற்றின் காத்திருப்பும், கவனிப்பும் அசம்பாவிதம் நேருவதைத் தவிர்த்தது.

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளில் ஒருவராகிய அபக்கூக்கு தேவனுடைய குரலுக்காகக் காத்திருந்ததையும், கேட்பதில் கவனமாக இருந்ததையும் குறித்து வேதாகமத்தில் நாம் வாசிக்கிறோம் : "நான் காவல் மாடத்தில் நிற்பேன்; கோட்டைமேல் நின்று காவல் புரிவேன்; என் வாயிலாக ஆண்டவர் என்ன கூறப்போகின்றார் என்றும் என் முறையீட்டுக்கு என்ன விடையளிப்பார் என்று கண்டறிவதற்காகக் காத்திருப்பேன்" (அபக்கூக்கு 2:1-4) அவருடைய முறையீடு என்ன? "..நீதி தடம்புரண்டு காணப்படுகிறது" (அபக்கூக்கு 1:14 பி.பா); "ஆண்டவரே, எத்துணைக் காலத்திற்கு நான் துணை வேண்டிக் கூக்குரலிடுவேன்?" (அபக்கூக்கு 1:2மு.பா.)

நாம் பலமுறை தேவனிடம் கேள்விகள் கேட்கிறோம். ஆனால் அவருடைய பதிலுக்குக் காத்திருக்கிறோமா அல்லது நம்முடைய சொந்தக் கருத்துகள், நம்முடைய படபடப்பு, நம்முடைய பயம் அல்லது நம்முடைய கோபத்திற்கு உடனே இடம் கொடுத்து விடுகிறோமா? தேவனை நோக்கிக் கதறுகிற நாம் பதிலுரைக்க தேவனுக்கு ஒரு வாய்ப்பு கொடுக்கிறோமா? காத்திருந்து அவருடைய குரலைக் கவனமுடன் கேட்கிறோமா? காத்திருப்பதும், கவனிப்பதும் எவ்வளவு அவசியமானது! "அமைதிகொண்டு, நானே கடவுள் என உணர்ந்து கொள்ளுங்கள்" (திருப்பாடல் 46:10மு.பா.) எவ்வகைப் புயலின் நடுவிலும் அமைதியுடன் காத்திருந்து தேவனுடைய மறுமொழிக்கு செவிகொடுப்போமாக! ஆமென்!!

# இரட்சிப்பின் நம்பிக்கையை தரித்துக்கொள்ளுங்கள்

சகோ. S. ஜெபராஜ் President, Grace Ministries

உயிர்த்தெழுந்த இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் வல்லமையுள்ள நாமத்தில் உங்களனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள். ஒவ்வொரு மாதமும் விசுவாச வாழ்வு அறிக்கையின் அடிப்படையில் தேவஒத்தாசையோடு அநேக விசுவாச அறிக்கைகளை அனுபவமாக்க உதவி செய்யும் ராஜாவாகிய இயேசுவுக்கே ஸ்தோத்திரமும், துதியும், கனமும், மகிமையும் உண்டாவதாக. நமது விசுவாச வாழ்வில் தேவையான மற்றுமொரு காரியம் 'இரட்சிப்பின் நம்பிக்கை' நாமோ இரட்சிப்பின் நம்பிக்கையென்னும் தலைச்சீராவை தரித்துக் கொண்டிருக்கக் கடவோம் (1தெச. 5:8). "Hope of salvation" இரட்சிப்பின் நம்பிக்கை நம் ஒவ்வொருவரின் வாழ்விலும் செயல்பட வேண்டியது அவசியமாகும்.

## இரட்சிப்பை உறுதி செய்து கொள்ளுங்கள்

ஒரு மனிதன் இரட்சிப்பைப் பெறுவதற்குத் தேவையான காரியம் ஒன்றே. அது இயேசுகிறிஸ்துவின் மேல் வைக்கும் விசுவாசம். இயேசு கிறிஸ்துவை விசுவாசி. அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள். (அப். 6:31). நற்கிரியை இரட்சிக்காது. இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைத்திருந்தால் மட்டுமே நீங்கள் இரட்சிப்பைப் பெற முடியும். இந்த விசுவாசம் உங்களுக்கு மட்டும் சொந்தமானதாய் இருக்க வேண்டும். உங்கள் பெற்றோர் இயேசுவை விசுவாசிப்பதினால் நீங்கள் இரட்சிக்கப்பட முடியாது. கிருபையினாலே விசுவாசத்தை கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு (எபே. 2:8). நீங்கள் இயேசுகிறிஸ்துவின் மேல் தனி நபராய் விசுவாசம் கொண்டால் இரட்சிக்கப்படுவீர்கள். நீங்கள் தேவனுடைய பலத்த கரத்தின் பாதுகாப்புக்குள் வந்து விடுகிறீர்கள். இயேசுவின் சீஷனாய் மாறிய அந்திரேயா என்பவர் இயேசுவை இரட்சகராக விசுவாசித்தபோது தன் இரட்சிப்பின் அனுபவத்தை தன் சகோதரனாகிய சீமோனைக் கண்டு கூறினார் "மேசியாவைக் கண்டோம்" (யோ. 1:41)

நீங்கள் இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் பாவங்கள் கழுவப்பட்டு, மன்னிப்பையும் மீட்பையும் பெற்றுக்கொண்ட அனுபவத்தை மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ளுங்கள். நீங்கள் செய்கிற இந்த இரட்சிப்பின் விசுவாச அறிக்கை இன்னும் உங்கள் சிந்தனையை தெளிவாக்கும் உங்கள் இரட்சிப்பில் நிலைத்திருக்க உதவி செய்யும். இந்த கடந்த கால இரட்சிப்பின் அனுபவம் நிகழ்காலத்திலும் உங்களில் தொடர, எதிர்காலத்திலும் இரட்சிப்பைக் காத்துக்கொள்ள வழி நடத்தும். உங்கள் இரட்சிப்பை உறுதியாய் உங்களுக்குள் உணர்ந்து கொள்ளும் அனுபவத்திற்குள் வழிநடத்தும். "Salvation is not only withering of sins; but it is greater than that, it is elinging to Christ who is the prince of salvation" 'இரட்சிப்பு என்பது பாவங்களை களைந்து விடுவது மாத்திரமல்ல, அதைவிட மேன்மையானது, அது



இரட்சிப்பின் பிரபுவாகிய இயேசுகிறிஸ்துவோடு ஒட்டிக்கொள்வது' என்று ஒரு வேத அறிஞர் கூறுகிறார். உங்கள் இரட்சிப்பை உறுதி செய்து கொள்ளுங்கள்.

## 2. விசுவாச வாழ்வின் பாதுகாப்பை உறுதி செய்யுங்கள்

'இரட்சிப்பின் நம்பிக்கை' என்பது ஒவ்வொரு ஆவிக்குரிய மனிதனுடைய வாழ்விலும் பாதுகாப்பாய் அமைகிறது. இரட்சிப்பின் நம்பிக்கை என்னும் தலைச்சீரா' (1தெச. 5:8), இரட்சிப்பென்னும் சீராவை தமது சிரசில் தரித்து (ஏசா. 59:17) என்பதாய் வேதத்தில் வாசிக்கிறோம். தெளிந்த புத்தியுள்ளவர்களாய், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான். விசுவாசத்தில் உறுதியாயிருந்து அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள். (1பேது. 5:8,9). தேவப் பிள்ளைகள் அனைவருக்கும் ஒரே ஒரு எதிரி உண்டு. அவன்தான் பிசாசானவன் அவனை எதிர்த்து நிற்க நீங்கள் எப்பொழுதும் ஆயத்தமாக இருக்க வேண்டும். அவன் பல வழிகளில் தாக்குதல் நடத்த முயற்சிப்பான். இருசக்கர வாகனங்களில் பயணிப்போர் 'தலைக்கவசம்' அணியும்படி அறிவுறுத்தப்படுகிறார்கள். 'தலைக்கவசம் உயிர் கவசம்' என்கிற வாசகங்களைப் படித்திருப்பேம். அதுபோல ஆவிக்குரிய வாழ்வின் பாதுகாப்பு "இரட்சண்யம் என்னும் தலைச்சீரா" மனிதனுடைய சிந்தனையின் வேகம் ஒளியின் வேகத்தைவிட அதிகமாம். உங்களுடைய சிந்தை பரிசுத்தமாய் பாதுகாக்கப்படவேண்டும். பாவ சிந்தனையின் போராட்டங்களை ஜெயிக்கும்படி இயேசு தலையில் முட்கிரீடம் சூட்டப்பட்டார். வீண் சிந்தனைகளை வெறுத்து வேதத்தில் பிரியப்படுங்கள். (சங். 119:113). தேவனுக்கேற்றவைகளை சிந்தியுங்கள் (மத். 16:23). சிந்தைகளினால் வீணராகாதிருங்கள். (ரோம. 1:21). மேட்டிமையானவைகளை சிந்தியாதிருங்கள் (ரோ. 12:16). பரிசுத்தமான சிந்தையைக் காத்துக்கொள்ள இரட்சிப்பின் நம்பிக்கை என்கிற தலைச்சீராவை அணிந்து கொள்ளுங்கள். இதுவே சத்துருவானவனை எதிர்த்து போராட அணிந்து கொள்ளவேண்டிய மிக முக்கியமான ஆயுதவர்க்கம்.

## 3. இரட்சிப்பின் ஐக்கியத்தை உறுதி செய்யுங்கள்.

இரட்சிப்பின் நம்பிக்கையில் வளர நல்ல ஐக்கியம் தேவை. முதலாவது உங்கள் ஐக்கியம் இயேசுகிறிஸ்துவோடு இருக்க வேண்டும். தம்முடைய குமாரனும் நம்முடைய கர்த்தராயுமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவுடனே ஐக்கியமிருப்பதற்கு உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர். (1கொரி. 1:9). ஜெபங்கள் ஆராதனையின் முடிவு நேரத்தில் ஒரு ஆசீர்வாதமான ஜெப விண்ணப்பம் சொல்லப்படுவதை கேட்டிருக்கிறோம். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும் உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக. (2கொரி. 13:14). நீங்கள் ஒழுங்கிலே நடப்பதற்கும், விசுவாச வாழ்க்கையில் வளருவதற்கும் ஒரு நல்ல ஐக்கியத்தில் இணைந்திருங்கள். ஆவிக்குரிய வாழ்வில் உங்களில் பலவீனங்கள், தடுமாற்றங்கள் ஏற்பட்டால், சக விசுவாசிகள் தேற்றி, ஊக்கப்படுத்தி சீர்திருத்தி வழிகாட்டுவார்கள். தேவனோடு உறவாடுவதிலும் கூடி

நடப்பதிலும், உங்கள் உற்சாகம் குறைந்து நீங்கள் குளிருமின்றி அனலுமின்றி இருந்தால் உங்கள் ஆவிக்குரிய நண்பர்கள் உங்களைத் தட்டியெழுப்பி உற்சாகப்படுத்தி, தேவனுடன் இன்னும் தீவிர உறவுகொள்ள, அவரோடு பேச, அவருடைய சத்தத்தை ஒவ்வொரு நிமிடமும் கேட்க ஐக்கியம் உங்களுக்கு வழிகாட்டும். இந்த உலகில் விழுந்து போகிறவர்களுக்காக, சோர்ந்து போகிறவர்களுக்காக உலக வாழ்விலும் சரி, ஆவிக்குரிய ஜீவியத்திலும் சரி அனுதாபப்படுகிறவர்கள் உண்டு. ஆனால் உங்கள் பலத்தைக் கட்டி எழுப்பி உங்களை நிலைநிறுத்த தேவன் ஒருவரால் மாத்திரம் முடியும். கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவன்தாமே கொஞ்சகாலம் பாடநுபவிக்கிற உங்களைச் சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி நிலைநிறுத்துவாராக. (1பேது. 5:10).

**எனது விசுவாச அறிக்கை :** இரட்சிப்பின் நம்பிக்கையென்னும் தலைச்சீராவை தரித்துகொள்கிறேன்.

---

**ஜெபியுங்கள்!** **கலந்து கொள்ளுங்கள்**

| | |
|---|---|
| மே 9 – 11ம் தேதி | கூடாரப்பண்டிகை, திருமூலநகர் நிலப்பாறை, குமரி மாவட்டம் |
| ஜுன் 2ம் தேதி | ஆசிரியர்கள் தியானக் கூடுகை, செங்கல்பட்டு |
| ஜுன் 28ம் தேதி | உபவாச ஜெபம் பாறைக்கன்விளை, குமரி மாவட்டம் |
| ஜுலை 30ம் தேதி | வியாபாரிகள் ஆசீர்வாத கூடுகை கோயம்புத்தூர் |

செய்தி : **சகோ. பா. பொற்செல்வன் ஆசீர்**

## *தூத்துக்குடியில் அற்புத உபவாச நாள்*

நாள் : 2014 மே 27 – கடைசி செவ்வாய்
நேரம் : காலை 10 மணி முதல் மாலை 3 மணி முடிய
இடம் : காமராஜர் திருமண மண்டபம்,
பிரையண்ட் நகர், 5வது தெரு மெயின், தூத்துக்குடி.

*தேவசெய்தி :* **சகோ. பா. பொற்செல்வன் ஆசீர்**

**விருதுநகர் மாவட்டம் ஏழாயிரம் பண்ணை**
**தேவனுடைய கூடாரத்தில் திறப்பின் வாயில் ஜெபம்**

2014 மே 28, கடைசி புதன் – காலை 10 மணி முதல் மாலை 3 மணி முடிய

*தேவசெய்தி :* **சகோ. P. செல்வக்குமார்**
கிருபையின் ஊழியங்கள், பெருமாநல்லூர்
**சகோ. பா. பொற்செல்வன் ஆசீர்**

நீங்களும் வாருங்கள்! கலந்து கொள்ளுங்கள்!
இயேசு உங்களுக்கு அற்புதம் செய்வார்!!

**தேவனுடைய கூடாரம்,** மெயின் ரோடு, ஏழாயிரம்பண்ணை–626 201. போன் 04562–258194



# எபேசியர் 1ம் அதிகாரத்தில் மேன்மையான சத்தியங்கள்

*தொகுப்பு :* சகோ. B. பொற்செல்வன் ஆசீர்

1. தேவனுக்கு முன்பாக நமது அன்பு பரிசுத்தமுள்ளதும் குற்றமற்றதுமாயிருப்பதாக. (1:4)
2. நம்முடைய தெரிந்துகொள்ளுதல் தேவனால் கிறிஸ்துவுக்குள் உண்டாயிருக்கிறது. (1:4)
3. நம்முடைய தெரிந்துகொள்ளுதல் தேவனால் கிறிஸ்துவுக்குள் உலகத்தோற்றத்துக்குமுன்னே நியமிக்கப்பட்டது. (1:4)
4. நம் தேவன் நம்மை முன்குறித்திருப்பது தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே இயேசுகிறிஸ்துவின் மூலமே (1:6)
5. தேவனுடைய முன்குறித்தலால் நாம் அவருடைய சுவிகார புத்திரராக மாற்றப்பட்டுள்ளோம். (1:6)
6. நாம் பெற்றுக்கொண்ட பாவமன்னிப்பாகிய மீட்பு இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினாலே தேவனுக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது. (1:7)
7. நாம் பெற்றுக்கொண்ட பாவமன்னிப்பாகிய மீட்பு தேவனுடைய கிருபையின் ஐசுவரியத்தின்படி நமக்கு உண்டாயிருக்கிறது (1:7)
8. தேவனுடைய கிருபை நம்மேல் அவருடைய சகல ஞானத்தோடும் புத்தியோடும் பெருககிறது. (1:8)
9. எல்லாவற்றிலும் தம்முடைய சித்தத்தின் ஆலோசனைக்குத்தக்கதாக நடப்பிக்கிற தேவனால் நாம் முன்குறிக்கப்பட்டுள்ளோம். (1:12)
10. தமது சித்தத்தின் ஆலோசனைக்கு தக்கதாக எல்லாவற்றையும் நடப்பிக்கிற தேவனால் அவருடைய சுதந்தரராகும்படி தெரிந்து கொள்ளப்பட்டுள்ளோம். (1:12)
11. நாம் விசுவாசிகளான போது வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் தேவனுக்குள் முத்திரை போடப்பட்டோம். (1:14)
12. தேவன், நாம் அவரை அறிந்து கொள்வதற்கான ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியையும் நமக்கு தந்தருளுகிறவராயிருக்கிறார். (1:17)
13. தேவன் பரிசுத்தவான்களிடத்தில் நமக்கு உண்டாயிருக்கிற சுதந்தரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்று அறியச்செய்ய வல்லவராயிருக்கிறார். (1:18)
14. தேவன் நம்மை அழைத்ததினாலே நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை இத்தகையதன்று நமக்கு விளங்கப்பண்ணுகிறவர் தேவனே. (1:18)
15. நமக்கு பிரகாசமுள்ள மனக்கண்களை தந்தருளுபவரும் தேவனே (1:19)
16. விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்தில் தேவன் காண்பிக்கும் தம்முடைய வல்லமை மகா மேன்மையான மகத்துவம் ஆகிய இவைகள் இன்னதென்று நம்மை அறியச் செய்கிறவர் தேவனே (1:19)
17. எல்லாத் துரைத்தனத்துக்கும் மேலாய் உயர்ந்திருக்கிறவர் இயேசுகிறிஸ்துவே. (1:20)

18. எல்லா வல்லமைக்கும் மேலாய் உயர்ந்திருக்கிறவர் இயேசுகிறிஸ்துவே (1:20)
19. எல்லா கர்த்தத்துவத்துக்கும் மேலாய் உயர்ந்திருக்கிறவர் இயேசுகிறிஸ்துவே (1:20)
20. இம்மையில் மாத்திரமல்ல மறுமையிலும் பேர் பெற்றிருக்கும் எல்லா நாமத்திற்கும் மேலாய் உயர்ந்திருக்கிறவர் இயேசுகிறிஸ்துவே (1:20)
21. எல்லாவற்றையும் தம்முடைய பாதங்களுக்குக் கீழ்ப்படித்தினவர் இயேசுகிறிஸ்துவே (1:20)
22. எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவர் இயேசு கிறிஸ்துவே (1:22)
23. நிறைவாகிய சரீரமாகிய சபைக்கு எல்லாவற்றிற்கும் மேலான தலையாக தந்தருளப்பட்டவர் இயேசுகிறிஸ்துவே (1:23)

---

## *பணித்தளங்களில் தேவன் செய்த கிரியைகளுக்காய் தேவனைத் துதிப்போம்*

### தூத்துக்குடி மாவட்டம்

பணித்தளம் : **தட்டப்பாறை** – சகோ. கணேஷ் விபத்தினால் செயல் இழந்த கைகள், கால்கள், கண்கள் சுகம் அடைய தேவன் உதவி செய்ததால் துதிப்போம்.

பணித்தளம் : **திருக்களூர்** – சகோதரி. சுபாநந்தினி இடம் வாங்கும் பிரச்சனையிலிருந்து விடுதலை கொடுத்ததற்காக... சகோதரி. பியூலா, சகோதரி. எஸ்தர்ராணியின் குழந்தைக்கு இருந்த பெலவீனத்திலிருந்து கர்த்தர் பூரண சுகம் கொடுத்ததறகாக... சகோ. பாலா, சகோதரி. எஸ்தர் அவர்களின் கணவர் இவர்களுக்கு இருந்த குடிப்பழக்கத்திலிருந்து கர்த்தர் விடுதலை கொடுத்து பிரிந்து இருந்த குடும்பம் சேர்ந்து வாழ உதவி செய்ததற்காக...

பணித்தளம் : **சுப்பிரமணியபுரம் – கட்டாலங்குளம்** ஆலயத்தில் வாலிபப் பெண்கள் ஜெபக்குழு ஆரம்பிக்க கிருபை செய்ததற்காக... சகோதரி. மேகலா திருமணத்தைக் கர்த்தர் நடத்திக் கொடுத்ததற்காக...

### விருதுநகர் மாவட்டம்

பணித்தளம் : **சாத்தூர்ரூரல்** – நீராவிப்பட்டி என்ற கிராமத்தில் சிறுவர் ஊழியம் நடத்தவும், அநேக பிள்ளைகள் கலந்து கொள்ளவும் கர்த்தர் கிருபை செய்ததற்காக... சகோதரி. லட்சுமி திருமணம் நடக்க கிருபை செய்ததற்காக... சகோதரி. ஜோதி வீடுகட்ட இடத்தையும், பணத்தேவைகள் சந்திக்கப்படவும் தேவன் கிருபை செய்ததற்காக...

பணித்தளம் : **சிவகாசி** – பவுல் ஆண்டனி பாரா மெடிக்கல் மாணவியர்களுக்கு உண்டு உறைவிடப் பள்ளி சிறுவர்களுக்கு மற்றும் முதியோர் இல்லப் பெரியவர்களுக்கு தனித்தனியாக ஜெபக்கூடுகை நடத்த கர்த்தர் கிருபை செய்ததற்காக...

### மதுரை மாவட்டம்

பணித்தளம் : **திரளி** – ஆலயத்தில் நடைபெற்ற குடும்ப முகாமை தேவன் 100 பேருக்கும் அதிகமான நபர் கலந்து கொண்டதற்காக... புதிதாக ஆராதனைக்கு வரும் சகோ. சரவணனுக்காக...



### அரியலூர் மாவட்டம்

பணித்தளம் : **வெத்தியார்வெட்டு** (மிஸ்பா) – காட்டத்தூரில் ஆராதனைக்கு நல்ல இடம் தந்ததற்காக... சகோ. மணிக்கு கடன் பிரச்சனையில் இருந்து விடுதலை கொடுத்ததற்காக...

### தூத்துக்குடி மாவட்டம்

பணித்தளம் : **ஆண்டாள்நகர்** – மிஷனெரி ரெபேக்காள் கடந்த 6 மாதம் இருந்த தலைவலியில் இருந்து பூரண சுகம் கொடுத்ததற்காக...

பணித்தளம் : **அழகப்பபுரம்** – சகோதரி. சுகிலா வயிற்றில் உள்ள கட்டியிலிருந்து பூரண சுகம் கர்த்தர் கொடுத்ததற்காக...

பணித்தளம் : **அய்யனேரி** – சகோ. அந்தோணி எடை குறைவாக பிறந்த குழந்தைக்கு கர்த்தர் நல்ல ஜீவன் கொடுத்து குழந்தை ஆரோக்கியமாக வளர செய்ததற்காக...

## *பணித்தளங்களுக்காய் முழங்காலில்*

### தூத்துக்குடி மாவட்டம்

பணித்தளம் : **தட்டப்பாறை** – சகோ. பாண்டி சுகர் வியாதியிலிருந்து சுகம் கிடைக்க... சகோ. கணேஷ் பாதிக்கப்பட்ட மனநிலை குணம் ஆகவும்... சகோ. நடராஜன் மகன் பரிபூரண இரட்சிப்பு பெற ஜெபியுங்கள்.

பணித்தளம் : **தாதன்குளம்** – சின்னார்குளம், வள்ளுவர் காலனி கிராமங்களில் நடத்தும் ஆராதனைக்கு இடம் வாங்க தடைகள் மாற... தேவைகள் சந்திக்கப்பட... சகோ. செல்வராஜ் பக்கவாதம் குணமடைய... சகோதரி. கலியாணி கேன்சர் கட்டி ஆப்ரேஷன் பயம் நீங்க...

பணித்தளம் : **திருக்களூர்** – சகோதரி. பியூலா அசுத்த ஆவியிலிருந்து விடுதலை கிடைக்க... சகோதரி. சின்னத்தாய் தொண்டையில் உள்ள தைராய்டு கட்டி குணமாக... சகோதரி. திரெசாள் கணவர் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை கிடைக்க...

பணித்தளம் : **தூத்துக்குடி ரூரல்** – சகோதரி. தேவகிருபை மூட்டுவலி பூரண சுகம் கிடைக்க... தங்கை பாப்டிமா (1½ வயது) நுரையீரல் சளி கட்டி சிகிச்சை செய்தும் குணமாகவல்லை. பூரண சுகம் கிடைக்க... சகோ. ஜனார்த்தனன் டேவிட் நுரையீரல் சளி கட்டி, சகோதரி. சித்ரா வயற்றில் கட்டி குணமாக...

பணித்தளம் : **சுப்பிரமணியபுரம்** – சகோதரி. ஸ்மைலின் வேலை கிடைக்க... சகோ. சேகர் கிட்னி பிரச்சனையிலிருந்து விடுதலை பெற... சகோதரி. பிரபா ஏற்ற துணை கிடைக்க... சகோதரி. பாக்கியசெல்வி, அன்னமேரி, ஜோதி, லைசா, மரியா, பால்தங்கம் இவர்களுக்குத் தேவன் கர்ப்பத்தின் கனி கொடுக்க...

பணித்தளம் : **ஸ்ரீமூலக்கரை** – சகோ. அரசப்பன் ஏற்ற துணை கிடைக்க... சகோ. செல்வம் நல்ல வேலை கிடைக்க... சகோதரி. சக்திக்க கட்டப்பட்டுள்ள நாவு திறக்கப்பட்டு நன்றாக பேச...

### தூத்துக்குடி மாவட்டம்

பணித்தளம் : **ஆண்டாள்நகர்** – சகோதரி. பானுமதி எலும்பு தேய்மானத்தினால் உண்டான வலி நீங்கவும், கர்ப்பத்தின் கனி கிடைக்க... சகோதரி. லீயோனம்மாள் மகனும் மருமகளும் பிரிந்து வாழ்கிறார்கள். பிள்ளைகள் அனாதை இல்லத்தில் (4 குட்டி பிள்ளைகள்) சேர்க்கப்பட்டுள்ளது. பிரிந்த இவர்களை கர்த்தர் சேர்த்து வைக்க...

பணித்தளம் : **அழகப்பபுரம்** – சகோ. மணி குடியிலிருந்து விடுதலை அடைய... சகோ. பெருமாள் ஆஸ்துமா வியாதியிலிருந்து விடுதலை கிடைக்க... சகோதரி. திவ்யா குழந்தை பாக்கியம் கிடைக்க...

பணித்தளம் : **அய்யனேரி** – இங்கு ஆலயம் கட்டுவதற்கு விரைவில் பஞ்சாயத்து தலைவர் அனுமதி கொடுக்க... 8 கிராமங்களில் நடக்கும் VBS தடையில்லாமல் நடைபெற... சகோ. குணசேகரன் கால்வலியிலிருந்து சுகம் கிடைக்க... 5 வயது சிறுவன் மணிகண்டன் சிறுமி ரம்யா மனவளர்ச்சியின்று நடக்கமுடியாமல் இருக்கும் அவனுக்கு கர்த்தர் பூரண சுகம் கொடுக்க....

பணித்தளம் : **மைப்பாறை** – சகோதரி. லீதியம்மாள் (31-3-2014) கர்த்தருககள நித்திரையடைந்ததால் அவர்கள் குடும்பம் (மகன், மகள், பேரன், பேத்திகள்) ஆறுதல் அடைய... நமது மிஷனெரி, சகோதரி. எமிம்மாள் நல்ல ஆரோக்கியம் கிடைக்க... ஐந்து கிராமங்களில் நடக்கும் VBS தடையின்றி நடக்க, தேவைகள் சந்திக்கப்பட... தன்னார்வ ஊழியர்கள் தொடர்ந்து வர...

**திருநெல்வேலி மாவட்டம்**

பணித்தளம் : **அத்தியூத்து** – இங்கு ஆலயம் கட்ட நல்ல இடம் கிடைக்க... சகோதரி. சொரணம் குறி சொல்லுகிற ஆவி வெளியேற... சகோதரி. இசக்கியம்மாள் இருதய அடைப்பு மாற... சகோதரி. சக்தி கழுத்தில் கட்டி மறைய... சகோ. மாரியப்பன் ஊறல் நோய் குணமாக... சகோ. சக்திவேல் தொண்டையில் உள்ள சதை கரைந்து போக... சகோதரி. இந்திரா, சகோதரி. பொன்செல்வி கர்ப்பத்தின கனி கிடைக்க...

பணித்தளம் : **பணக்குடி** – சகோ. ராஜ்குட்டி மகள் இழுப்பு நோய் மாற... வள்ளியூரில் புதிதாக சிறுவர் கூடுகை ஆரம்பிக்கப்பட... சகோதரி. எஸ்தர் மகள், சகோதரி. கனி மகள், சகோ. சந்தோஷ்குமார் திருமணத் தடைகள மாற... சகோ. முருகன், சகோ. வேல்முருகன், சகோ. தியாகராஜன், சகோதரி. அனிதா குடும்பம், சகோதரி. தங்கபுஷ்பம் குடும்பம் இரட்சிக்கப்பட...

**திருச்சி மாவட்டம்**

பணித்தளம் : **தோப்புப்பட்டி –** சகோதரி. ஜெபஸ்டின் நிர்மலா தீராத வயிற்றுவலி குணமாக... சகோ. லியோன்ராஜ் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற... சகோதரி. அபிராமி அப்பா குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற... சகோதரி. வினிதா குடும்பம் கடன் பிரச்சனையிலிருந்து விடுதலை பெற... ஊர்த்தலைவர் சகோ. ஜான் கென்னடி, சகோ. கோயில்பிள்ளை ராயப்பர் இரட்சிக்கப்பட...

**விருதுநகர்மாவட்டம்**

பணித்தளம் : **சாத்தூர் ஸூரல்** – தனிஸ்லாஸ் என்கிற ஆர்.சி. பள்ளியில் மாணவர் ஆலோசனைக் கூட்டம் நடத்த தடைகள் மாற... சிறுவர் முகாம் நடத்த தேவைகள் சந்திக்கப்பட... **ஆளம்பட்டி கிராமத்தின்** சிறுபிள்ளைகள் எல்லாரும் கெட்ட வார்த்தை பேசுகிறார்கள். அது மாறவும் அந்த கிராமம் இரட்சிக்கப்பட்டு சிறுவர் ஊழியம் தடையில்லாமல் நடைபெற...

பணித்தளம் : **புல்லாலக்கோட்டை** – இங்குள்ள மக்களுக்கு பேரூந்து வசதி கிடைக்க... கிராமம் முன்னேற... சகோ. லிங்கம் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற... குடும்ப



சமாதானம் கிடைக்க... சகோ. அழகேசன் வயிற்று கடுப்பு, கல்லடைப்பு இந்த வியாதியிலிருந்து ஆண்டவர் சுகம் கொடுக்க... சகோ. ஜான்சன் நல்ல வேலை கிடைக்க...

பணித்தளம் : **சிவகாசி** – சகோதரி. எலிசபெத் பக்கவாத நோயிலிருந்து விடுதலை பெற... சகோதரி. லீதியாள், சகோதரி செலஸ்டா, சகோதரி. உஷா ஜெயசந்திரன் இவர்களுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க... சகோதரி. ஆலைமணி நல்ல வேலை கிடைக்க...

பணித்தளம் : **முக்கூட்டுமலை** – சகோதரி. செல்வி பாம்புக்கடி விஷம் முறியடிக்கப்பட்டு பூரண சுகம் கிடைக்க... இந்தப் பகுதியில் உள்ள இனவெறி முற்றிலும் மாற... சகோதரி. பேச்சி வண்டு கடித்ததால் பாதிக்கப்பட்ட கால் பூரண சுகம் உண்டாக...

**மதுரை மாவட்டம்**

பணித்தளம் : **திரளி** – சகோதரி. லெட்சுமி (ஆசிரியர்) கண்பார்வை குணம் அடைய... சகோதரி. ரூபி பிசாசு பிடியிலிருந்து விடுதலை கிடைக்க... ஞானஸ்நானம் எடுத்து பின்மாற்றத்தில் இருக்கும் சகோ. தாமஸ், சகோ. ரமேஷ், சகோ. திருப்பதி, சகோ. முருகன் மனம் மாற... சகோ. மாணிக்கம் ஆராதனைக்கு வர தடைகள் மாற...

**திருநெல்வேலி மாவட்டம்**

பணித்தளம் : **திருவேங்கடம்** – சகோ. சௌந்திரபாண்டி கண் பார்வை கிடைக்க... சகோதரி. சம்முனா கணவர் சர்க்கரை வியாதியில் இருந்து விடுதலை கிடைக்க... திருவேங்கடத்தில் ஆலயம் கட்ட அனுமதி கிடைக்க...

**அரியலூர் மாவட்டம்**

பணித்தளம் : **வெத்தியார் வெட்டு (மிஸ்பா)** – சகோதரி. மஞ்சு நல்ல வேலை கிடைக்க.. சகோ. சுரேஷ் திருமணத் தேவைகள் சந்திக்கப்பட... காட்டாத்தூர் கிராமத்தில் ஆலயம் கட்டபபட....

## வாலிபர் வெற்றி முகாமிற்கான ஜெபக்குறிப்புகள்

### *வெற்றி முகாம்* – நடைபெறும் தேதி மே 22-24

இம்முகாம் நமது ஆத்தும ஆதாய இளைஞர் இயக்கத்தின் மூலம் வாலிப சகோதர சகோதரிகளின் ஆசீர்வாதத்திற்காக ஆவிக்குரிய வளர்ச்சிக்காக நடைபெறும் வருடாந்திர முகாமாகும். இந்த ஆண்டு முப்பெரும் முகாமாக நடைபெறாமல் வாலிபருக்காக மட்டும் விசேஷித்த முகாமாக நடைபெறவுள்ளது.

1. வெற்றி முகாமின் தேவை ரூ.1½ லட்சம் சந்திக்கப்பட
2. ஏசா43:5-7 வசனங்களின் படி தேவன் முகாமிற்கு 500 வாலிப சகோதர சகோதரிகளைக் கொண்டு வரும்படியாக...
3. ஏசா44:3இன்படி முகாமிற்கு வரும் சந்ததியும் சந்தானமுள்ள வாலிபர் மேல் பரிசுத்த ஆவியாவரையும் ஆசீர்வாதத்தையும் தேவன் ஊற்ற..
4. ஏசா49:25இன்படி பராக்கிரமன் பிசாசினால் சிறைப்படுத்தப்பட்டவர்களும் பெலவந்தன் சாத்தானல் கொள்ளையிடப்பட்டவர்களுமான வாலிபர்கள் அநேகர் அசுத்த ஆவியின் வல்லமையினின்று விடுதலையாகி இந்த முகாமில் இரட்சிக்கப்பட.
5. அப்21:10இன்படி முகாமிற்கு வரும் வாலிபர்கள் தீர்க்கதரிசிகளாய் மாற..

இவ்வூழியம் விசேஷமாக கிராம சிறுவர்களுக்காக ஆலயமில்லா கிராமங்களை மையமாக வைத்து நடத்தப்படும் ஊழியமாகும். இந்த ஆண்டு 325 கிராமங்களுக்கும் மேலாக ஒவ்வொரு கிராமங்களிலும் 6 நாட்கள் நடத்தி அதன்மூலம் 16,500 சிறுவர்களுக்குச் சுவிசேஷத்தைச் சொல்லத் திட்டமிட்டுள்ளோம். மொத்த தேவை ரூ. 9 லட்சத்து 75 ஆயிரம்.

**இந்த ஆண்டு நமது ஆலயம் இல்லா கிராம VBS கள் "இயேசு எனக்காக" என்ற பொது கருத்தில் ஆறு நாட்களும் ஆறு தலைப்புகளில் நடைபெறும். இதற்காக ஜெபியுங்கள்!**

1. வெளி3:8இன்படி நாம் திட்டமிட்டபடி 325 கிராமங்களுக்கும் மேலாக கிராமங்களில் திறந்த வாசலை கர்த்தர் நமக்குத் தரும்படியாக...
2. சங்.49:2இன்படி சிறுபிள்ளைகள் செவிகொடுக்க...
3. மாற்.18:14இன்படி எல்லா சிறுவர்களும் இயேசுவை ஏற்றுக்கொள்ள..
4. ஏசா.54:17இன்படி எதிர்ப்புகள் மாற...
5. தன்னார்வ ஊழியர்களைப் பயிற்றுவிக்க நடைபெற்ற 5 பயிற்சி வகுப்புகளுக்காக தேவனை துதியுங்கள். (1. தூத்துக்குடி, 2. திருநெல்வேலி, 3. சிவகாசி, 4. விருதுநகர், 5. வெத்தியார்வெட்டு)
6. இப்பணிக்குத் தேவையான தன்னார்வ ஊழியர்கள் பயிற்சிகளில் கலந்து கொண்டு பயிற்சி பெற்ற தன்னார்வ ஊழியர்களை வல்லமையாய் தேவன் பயன்படுத்த ஜெபியுங்கள்.
7. நமது ஊழியர்களுடன் தன்னார்வ ஊழியர்கள் கிராமங்களில் பணி செய்யும்போது சக.9:8இன்படி தேவ பாதுகாப்பு இருக்க...
8. ஒரு சிறுபிள்ளைக்குச் சுவிசேஷம் சொல்ல ஆகும் செலவு ரூ. 75வீதம் 16.500 பிள்ளைகளைத் தாங்கும் விசுவாச தேவ பிள்ளைகளை அனுப்பித்தர அல்லது ரூ.3000 வீதம் கொடுத்து ஒரு VBS ஐ தாங்குவோரை தேவன் எழுப்ப..
9. ரூ. 3000 கொடுத்து VBS சை தாங்க முன் வந்த குடும்பங்களை தேவன் ஆசீர்வதிக்க ஜெபியுங்கள்.
10. இந்த ஆண்டில் திட்டமிட்டுள்ள VBSகள் 325
11. இந்த ஆண்டு VBSஇன் மொத்த தேவை ரூ. 9 இலட்சத்து 75 ஆயிரம் சந்திக்கப்பட
12. நமது மிஷனெரிகளை தன்னார்வ ஊழியர்களை தேவன் வியாதி பெலவீனங்கள் தாக்காது காத்துக்கொள்ள...
13. VBSநடைபெறும் கிராமங்களில் ஆராதனைக் குழுக்கள் ஆரம்பிக்கப்பட தேவன் வாசல்களை திறக்க.

14 VBS நடைபெறும் கிராமங்களில் தேவன் செழிப்பை ஆசீர்வாதத்தைக் கட்டளையிட



## *நமது ஊழியங்களை தாங்குவோர் கவனத்திற்கு*

நீங்கள் ஜெபத்துடன் நமது மிஷனெரி ஊழியத்தை, வாலிப, மாணவ, சிறுவர் ஊழியத்தை, ஜெப ஊழியத்தை தாங்க காணிக்கைகள் அனுப்பும் போது வங்கி கணக்குகள் மூலமும் அனுப்பலாம்.

| வங்கி கணக்கு பெயர் | IFS Code | வங்கி பெயர் | கணக்கு எண் |
|---|---|---|---|
| மிஷனெரி ஊழியம்<br>Grace Ministries<br>Grace Ministries | SBIN0007629<br>TMBL0000156 | SBI Bazaar, Tuticorin<br>TMB Ltd., Sipcot Tuticorin | 10237757808<br>156100710400123 |
| வாலிப மாணவர் சிறுவர் ஊழியம்<br>Young Soul Winners Mission | TMBL0000035 | TMB Ltd., Pudukottai. Tuty | 035100710400087 |
| ஜெப ஊழியம்<br>Tabernacle of God Mission | TMBL0000033 | TMB Ltd., Elairampannai. | 033100710400026 |

கடிதம் மற்றும் M.O. அனுப்ப தொடர்பு முகவரி :

**சகோ. B. பொற்செல்வன் ஆசீர்**

**கிருபையின் ஊழியங்கள்,** ஆபிரகாம் நகர், பெரியநாயகபுரம், தூத்துக்குடி-628 101.

Grace Ministries, Abraham Nagar, Periyanayagapuram, Tuticorin-628 101.

நீங்கள் அனுப்பும் காணிக்கைகள் யாவும் ஊழியத்தில் வரவு வைக்கப்பட்டு உங்களுக்கு இரசீது அனுப்பப்படும்.

நீங்கள் காணிக்கை அனுப்பியதை 94432-89026 என்ற எண்ணிற்கு SMS மூலமாகவோ அல்லது கடித மூலமாகவோ எங்களுக்கு தெரிவியுங்கள்.

## வேதம் சுட்டிக்காட்டும் மனசாட்சி

| | | |
|---|---|---|
| 1. | துர் மனசாட்சி | எபி. 10:22 |
| 2. | அசுத்தமான மனசாட்சி | தீத்து 1:15 |
| 3. | சூடுண்ட மனசாட்சி | 1 தீமோ. 4:1 |
| 4. | பலவீனமான மனசாட்சி | 1கொரி. 8:7 |
| 5. | மனசாட்சி | 1கொரி. 10:25,27,28,29 |
| 6. | உணர்த்தும் மனசாட்சி | எபி. 10:2 |
| 7. | செத்த கிரியைகளற சுத்திகரிக்கப்பட்ட மனசாட்சி | எபி. 9:14 |
| 8. | சுத்த மனசாட்சி | 1தீமோ. 3:9 |
| 9. | நல் மனசாட்சி | 1தீமோ. 1:5 |
| 10. | பூரணப்படுத்தப்பட வேண்டிய மனசாட்சி | எபி. 9:9 |
| 11. | தேவன் பேரில் பற்றுதலாயிருக்கிற மனசாட்சி | 1பேது. 2:19 |
| 12. | பரிசுத்தாவிக்குள் என் மனசாட்சி | ரோமர் 9:2 |